# கீழக்கரை நகர்மன்ற 30.07.2021–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

## பொருள் :1

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகராட்சி பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அனைத்து பகுதிகளிலும் தனியார் மூலம் குப்பை சேகரிக்க 55 பணியாளர்களை அனுமதித்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்திரவு ந.க.எண்.6819/2017/பி3 நாள்.14.03.2018–ன்படி தனியார் மூலம் பணிகள் பார்த்திட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இவ்வலுவலக செயல்முறை ஆணை உத்திரவு ந.க.எண்.1528/2017எச்1, நாள்.03.08.2018–ன்படி மதுரை எக்ஸெர்நெட் நிறுவனத்திற்கு 03.08.2019 முதல் 02.08.2020 வரை ஓராண்டிற்கு பணி உத்திரவு வழஙகப்பட்டு தற்போது வரை பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்திடமிருந்து தொடர்ந்து பணி மேற்கொள்ள விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி பொதுசுகாதார நலன் கருதி மதுரை எக்ஸெர்நெட் நிறுவனத்திற்கு தொடர்ந்து 03.08.2020 முதல் 02.08.2021 வரை ஓராண்டிற்கு பணி நீட்டிப்பு செய்ய உத்திரவு வழஙகப்பட்டது. தற்பொழுது ஒப்பந்த காலம் முடிவடைந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. தற்பொழுது பொதுசுகாதார அவசர அவசியம் கருதி 03.08.2021 முதல் 02.11.2021 முன்று மாதஙகளுக்கு இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் குறிப்பு வழஙகப்பட்டுள்ளது. துப்புரவு ஆய்வாளரால் வழஙகப்பட்ட குறிப்புரையின்படி மேற்படி நிறுவனத்திற்கு முன்று மாத காலத்திற்கு பணிநீடிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் 1528/2017/எச்1)

அலுவலக குறிப்பு

1. பொதுசுகாதாரப் பணி அவசர அவசியம் கருதி தனியார் மூலம் குப்பை சேகரிக்கவும் அதற்கான செலவினஙகளை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. துப்புரவு ஆய்வாளர் குறிப்புரையின்படி மதுரை எக்ஸெர்நெட் நிறுவனத்திற்கு 03.08.2021 முதல் 02.11.2021 வரை முன்று மாத காலத்திற்கு பணிநீடிப்பு செய்யலாம்.

**தீர்மானம் எண்.878 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :2</u>**

இந்நகராட்சி வார்டு எண் 1 முதல் 11 வரையிலான பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் மூலம் 25 பணியாளர்களை கொண்டு முதல்நிலை திடக்கழிவு குப்பைகளை சேகரிக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண் 6011/பி3/2017 நாள் 15.06.2017–ன்படி அனுமதி வழுகப்பட்டு M/S.Exsernet. S.M.M.காம்ளாக்ஸ், கல்பாலம் ரோடு,கோரிப்பாளயம்,மதுரை-2. ஒப்பந்த அடிப்படையில் பணி உத்திரவு வழஙகப்பட்டு தற்போது வரை பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் 11.11.2020 வுடன் ஒப்பந்தம் முடிவடைகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி 14.06.2020–ந் தேதியுடன் முடிவடைந்தால் மேலும் 3 ஆண்டுகளுக்கு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் உத்திரவினை எதிர்நோக்கி 12.05.2021 முதல் 11.08.2021 வரை 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலகத்தில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி வழங்க அனுமதிக்கும் உத்திரவு நிலுவையில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி பணி நடவடிக்கை மேற்கொள்ள உரிய காலம் இல்லாததாலும் M/S.Exsernet. S.M.M.காம்ளாக்ஸ், கல்பாலம் ரோடு, கோரிப்பாளயம்,மதுரை-2. நிறுவனத்திற்கு 12.08.2021 முதல் 11.11.2021 வரை மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்தும் அதற்கான ஊதியம் வழங்க ரூ 12,00,000/– லட்சத்திற்கு அனுமதி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
(எச்1 /1528/2012)

**அலுவலக குறிப்பு**

பொதுசுகாதார நலன் அவசர அவசியம் கருதி வார்டு 1 முதல் 11 வரையிலான பகுதிகளில் தனியார் மூலம் குப்பைகள் சேகரிக்கும் பணிக்கு தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலகத்தில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி வழங்க அனுமதிக்கும் உத்திரவு நிலுவையில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி பணி நடவடிக்கை மேற்கொள்ள உரிய காலம் இல்லாததாலும் பொதுசுகாதார நலன் கருதி 3 மாதங்களுக்கு பணிநீடிப்பு செய்யவும் அதற்கான செலவினஙகளை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.879 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :3</u>**

இந்நகராட்சி தெரு விளக்கு பராமரிப்பு, குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை பராமரிப்பு பணிகள் ஒரு நபரைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.08.2021 முதல் 31.01.2022 வரை ஆறு மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செய்யவும், 30.06.2021–ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 28.07.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் 29.07.2021–ந் தேதி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **<u>வருவாய் நிதி–2021–2022</u>** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சி தெருவிளக்குகள் பராமரிப்பு, குடிநீர் மற்றும் கழிவு நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டர்கள் / ஆயில் என்ஜின்கள் பராமரிப்பு பணிகள் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) மேற்கொள்வதற்கு 01.08.2021 முதல் 31.01.2022 வரை ஆறு மாதங்களுக்கு ஒரு நபர் வழங்குதல். | 1.01 | M/s. எவர்கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், 15/18, லெட்சுமி காம்ப்ளக்ஸ், இரயில்வே பீடர் ரோடு, இராமநாதபுரம். | ரூ.99,994/– மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.20% குறைவு |
| | | | M/s. எக்ஸ்ர்நெட், 8, கல்பாலம் ரோடு கோரிப்பாளையம், மதுரை. | ரூ.1,00,397/– விலை விகிதத்தினை விட 0.20% அதிகம் |

**<u>(ந.க.எண்.361/2021/இ1)</u>**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.20% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. எவர் கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.880 அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் :4**

கீழக்கரை நகராட்சி பராமரிப்பில் உள்ள வார்டு எண்.1 புதிய பேருந்து நிலைய பின்புறம் உள்ள மாட்டுக் கொட்டகை, வார்டு எண்.16 புதுக்குடி மற்றும் வார்டு எண்.21 தட்டான்தோப்பு ஆகிய மூன்று கழிவு நீர் ஏற்ற நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும், அப்பகுதியில் அமைந்துள்ள கழிவுநீர் தொட்டிகளை பராமரிக்கும் பணிகளை ஆறு நபர்களை கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.08.2021 முதல் 31.01.2022 வரை ஆறு மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செய்யவும், 30.06.2021–ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 28.07.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் 29.07.2021–ந் தேதி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2021–2022** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள மூன்று கழிவு நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டார் / ஆயில் என்ஜின்களை இயக்குதல் மற்றும் கழிவு நீர் தொட்டிகளைப் பராமரித்தல் இரவு மற்றும் பகல் பணிகள் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) மேற்கொள்வதற்கு 01.08.2021 முதல் 31.01.2022 வரை ஆறு மாதங்களுக்கு 3 கழிவு நீரேற்று நிலையத்திற்கு இருவர் வீதம் ஆறு நபர்கள் வழங்குதல். | 6.30 | M/s. எவர்கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், 15/18, லெட்சுமி காம்ப்ளக்ஸ், இரயில்வே பீடர் ரோடு, இராமநாதபுரம். | ரூ.6,25,363/– மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.58% குறைவு |
| | | | M/s. எக்ஸர்நெட், 8, கல்பாலம் ரோடு கோரிப்பாளையம், மதுரை. | ரூ.6,28,992/– மதிப்பீட்டு விலை விகிதம் |

**(ந.க.எண். 362/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.58% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. எவர் கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

## தீர்மானம் எண்.881அனுமதிக்கப்பட்டது.

**பொருள் :5**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்று நிலையங்களில் உள்ள மோட்டார் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் இரண்டு நபர்களைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.08.2021 முதல் 31.01.2022 வரை ஆறு மாதங்களுக்கு பணி மேற்கொள்வதற்கும், அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செய்வதற்கும், 30.06.2021–ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 28.07.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் 29.07.2021–ந் தேதி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2021–2022** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்று நிலையங்களில் உள்ள மோட்டார் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) மேற்கொள்வதற்கு 01.08.2021 முதல் 31.01.2022 வரை ஆறு மாதங்களுக்கு இரண்டு நபர்கள் வழங்குதல். | 2.10 | M/s. எவர்கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், 15/18, லெட்சுமி காம்ப்ளக்ஸ், இரயில்வே பீடர் ரோடு, இராமநாதபுரம். | ரூ.2,08,454/– மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.58% குறைவு |
| | | | M/s. எக்ஸ்நெட், 8, கல்பாலம் ரோடு கோரிப்பாளையம், மதுரை. | ரூ.2,09,664/– மதிப்பீட்டு விலை விகிதம் |

**(ந.க.எண். 363/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.58% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. எவர் கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.882 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :6**

இந்நகராட்சி Mahindra BOLERO LX 2WD 7STR BS3 ஈப்பு வாகனம் TN65 S 4101-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை திண்டுக்கல், நந்தவனப்பட்டி மகேந்திரா நிறுவனத்தில் பழுது நீக்கம் செய்வதற்கும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டும், உரிய நடவடிக்கை மேற்கொள்ள **15.06.2021–ந்** தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில், மேற்காணும் நிறுவனம் மூலம் TN65 S4101 ஈப்பு வாகனத்தை பழுது நீக்கம் செய்வதற்கு பழுதுநீக்க மதிப்பீடுகள் / விலைப்புள்ளிகள் **15.06.2021–ந்** தேதி கோரப்பட்டது. அதன்படி கீழ்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. மகேந்திரா நிறுவனம், திண்டுக்கல் – விலைப்புள்ளி எண். QTN22F000011
   நாள். 29.06.2021 (அனைத்து வரிகளும் உட்பட) – ரூ. 1,35,427/–
2. மகேந்திரா நிறுவனம், திண்டுக்கல் – விலைப்புள்ளி எண்.QTN22F000017
   நாள். 08.07.2021 (அனைத்து வரிகளும் உட்பட) – ரூ. 1,19,242/–

----------

**ரூ. 2,54,669/–**

----------

மேற்கண்டவாறு வரப்பெற்ற மகேந்திரா நிறுவனத்தின் விலைப்புள்ளிகள் இந்நகராட்சி பொறியாளர்களின் பரிந்துரையின்படி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரிடம் **08.07.2021–ந்** தேதி முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN65 S4101 ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரிசெய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு பழுதுகளை உடனடியாக நீக்கம் செய்வதற்கு திண்டுக்கல், நந்தவனப்பட்டி மகேந்திரா நிறுவனத்திற்கு **09.07.2021–ந்** தேதி பணி உத்தரவு வழங்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 284/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. TN65 S4101 ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரி செய்வதற்கு திண்டுக்கல், நந்தவனப்பட்டி மகேந்திரா நிறுவனத்தில் கொடுத்துள்ள இரண்டு விலைப்பள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலவலரின் முன் அனுமதி பெற்று திண்டுக்கல், நந்தவனப்பட்டி மகேந்திரா நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.883 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :7

இந்நகராட்சிக்குட்பட்ட 21வது வார்டு தட்டான்தோப்பு தெருவில் அமைந்துள்ள 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மினிவிசை பம்ப் 1 HP மின்மோட்டார் காயில் பழுதாகி காப்பர்புஸ் தேய்மானம் ஆன நிலையில் இயங்காமல் உள்ளதை பழுதுநீக்கம் செய்து தருமாறு அப்பகுதி பொதுமக்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதை தொடர்ந்து, இவ்வலுவலக மின்பணியாளர் கோரிக்கை மற்றும் பொறியாளர்களின் அறிக்கையின்படி, இப்பணியை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள இந்நகர்மன்றத்தில் 30.06.2021–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்காணும் மினிவிசை பம்ப் 1 HP மின்மோட்டார் பழுது நீக்கம் செய்வதற்கு சரக்கு மற்றும் சேவை வரி (G.S.T.) குறிப்பிட்டு 09.07.2021–ந் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தகாரர் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | எம். இளையராஜா,<br>எஸ்.எம். இராஜா ரீ–வைண்டிங்,<br>420–D, மெயின்ரோடு,<br>கீழக்கரை | ரூ.4,350/– |
| 2 | ஸ்ரீ லிங்கம் எலக்ட்ரிக்கல் &<br>ரீ–வைண்டிங் ஒர்க்ஸ்,<br>E5 ஆலிம் புழவர் காம்ப்ளக்ஸ்,<br>பீசா பேக்கரி பின்புறம்,<br>கீழக்கரை. | ரூ.4,400/– |
| 3 | ஸ்ரீ சபரிவாசா<br>ரீ–வைண்டிங் ஒர்க்ஸ்,<br>R.A.காம்ப்ளக்ஸ்,<br>புதிய பஸ் நிலையம் அருகில்,<br>கீழக்கரை. | ரூ.4,410/– |

**(கோப்பு எண்.298/2021/இ1)**

**அலுவலக குறிப்பு:-**

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.4,350/–க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. எம். இளையராஜா, எஸ். எம். இராஜா ரீ–வைண்டிங், கீழக்கரை விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.884 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :8

கீழக்கரை நகராட்சி 21–வது வார்டு தட்டாந்தோப்பு கழிவுநீரேற்றும் நிலையத்தில் உள்ள மின்மோட்டார்களை மின்தடை நேரங்களில் இயக்குவதற்கு 15 K.V.A ஜெனரேட்டர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஜெனரேட்டரில் பொருத்தப்பட்டுள்ள மின்கலன் பழுதான நிலையில் உள்ளதால் மின்தடை நேரங்களில் கழிவுநீர் வெளியேற்றும் பணியில் சிரமம்

ஏற்படுவதால் பழுதான பழைய மின்கலனை மாற்றி புதிதாக மின்கலன் வாங்குவதற்கு இவ்வலுவலக மின்பணியாளர் கோரிக்கை மற்றும் பொறியாளர்களின் அறிக்கையின்படி, இந்நகர்மன்றத்தில் **30.06.2021–ந்** தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் புதிதாக 12 V மின்கலன் விநியோகம் செய்வதற்கு சரக்கு மற்றும் சேவை வரி (G.S.T.) குறிப்பிட்டு **15.07.2021–ந்** தேதி விலைப்புள்ளி கோரப்பட்டு, அன்று வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | விலையின் விகிதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | இராம்நாட் ஜெனரேட்டர்ஸ்,<br>15/F-4, A.K.S. காம்ப்ளக்ஸ்,<br>G.H. ரோடு,<br>இராமநாதபுரம். | **ரூ.9,050/–**<br>(புதிய பேட்டரி விலை ரூ.9,800 – பழைய பேட்டரி விலை ரூ.750) | குறைந்த விலைப்புள்ளி |
| 2 | ஸ்ரீ காமாட்சி பேட்டரிஸ் ஒர்க்ஸ்,<br>1/1038, குமரையா கோயில்<br>பஸ் ஸ்டாப், மண்டபம் ரோடு<br>இராமநாதபுரம். | **ரூ.9,600/–**<br>(புதிய பேட்டரி விலை ரூ.10,300 – பழைய பேட்டரி விலை ரூ.700) | கூடுதல் விலைப்புள்ளி |
| 3 | இராம்நாட் பேட்டரிஸ்,<br>3, R.R. சேதுபதி நகர்,<br>இராமநாதபுரம். | **ரூ.10,200/–**<br>(புதிய பேட்டரி விலை ரூ.10,800 – பழைய பேட்டரி விலை ரூ.600) | கூடுதல் விலைப்புள்ளி |

**(கோப்பு எண்.300/2021/இ1)**

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

இந்நகராட்சி 21–வது வார்டு தட்டாந்தோப்பு கழிவுநீரேற்றும் நிலையத்தில் உள்ள மின்மோட்டார்களை மின்தடை நேரங்களில் இயக்குவதற்கு 15 K.V.A ஜெனரேட்டரில் புதிதாக மின்கலன்கள் (12V Battery) விநியோகம் செய்வதற்கு (பழுதான கழிவு நிலையில் உள்ள பழைய மின்கலன் விலையினை கழித்து) ரூ.9,050/–க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள இராம்நாட் ஜெனரேட்டர்ஸ், இராமநாதபுரம் விலைப்புள்ளி ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.885 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/–எம். பூபதி,**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**